புதுப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.மா.ஆறுமுகம்

ந.க.எண்.21/2023/ஊ.செ

நாள்-07.03.2024

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு - செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் Mr. **T.ASHOK AND THREE OTHERS, NO.41, RWD PALM HOUSE, KAYATHIRI NAGAR, MEDAVAKKAM, CHENNAI – 600100.** என்பவரின் சர்வே எண் 92/5B1, 5B2, 5C1, மற்றும் 5C2 ல் 2000.00ச.மீ (0.50ஏக்கர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி அளித்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) ROC No. 2MO44X3H/2024/TCP DATED: 20.01.2024.
2. தானப்பத்திர எண் 30744/2023 நாள்- 27.12.2023.
3. புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்- 132 நாள் 07.03.2024 பலவகை வரவு ரசீது எண்-39457 நாள் 06.03.2024

****

உத்திரவு

பார்வை 1-ல் Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் Mr. **T.ASHOK AND THREE OTHERS, NO.41, RWD PALM HOUSE, KAYATHIRI NAGAR, MEDAVAKKAM, CHENNAI – 600100.** என்பவரின் சர்வே எண் 92/5B1, 5B2, 5C1, மற்றும் 5C2 ல் 2000.00ச.மீ (0.50ஏக்கர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **MLPA(CD) No.31/2024** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை - 2ல் காணும் தானப்பத்திரத்தின்படி, சாலை (639.0 ச.மீ), பொது உபயோகம் (Local Body) (6.97ச.மீ), மற்றும் பொது உபயோகம் TNEB (7.20 ச.மீ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் காணும் ஊராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையிலும், வளர்ச்சி கட்டணம் **ரூ.58964/-(ரூபாய் ஐம்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்கு மட்டும்)** ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும், கீழ்காணும் நிபந்தனைக்களுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதல் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விணணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2. மேற்படி மனைப்பிரிவில் தானப்பத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

4. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தபபட வேண்டும்.

5. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைதடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையினை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

M. அரசு பிரகம்
தலைவர்,
புதுப்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

7/3/24

பெறுநர்

Mr. **T.ASHOK AND THREE OTHERS,**
NO.41, RWD PALM HOUSE, KAYATHIRI NAGAR,
MEDAVAKKAM, CHENNAI – 600100.



சரிபார்க்கப்பட்டது : 92/5B1, 5B2, 5C1, DDNO 000219
*92/5C2

பலவகை வரவு ரசீது

அசல்

பற்றுச் சீட்டு A 39457

நாள் : 07/3/2024

..... ஊராட்சி

திரு. T. Ashok and others கிராமம் medavakkam - chennai என்பவரிடமிருந்து

ரூபாய் 58964/- (ரூபாய் Fifty Eight Thousand Nine hundred Sixty four/- மட்டும்)

மனைபிரிவு கூராய்வு கட்டணம் வகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

வரி வசூலிப்பவர் ஊராட்சி செயலர் புதுப்பாக்கம் ஊராட்சி

தலைவர் புதுப்பாக்கம் ஊராட்சி

குறிப்பு :

1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடதுகை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

இசேவை எண்: 132/07-03-2024